தினமணி

28 ஏப்ரல் 2021

புதன்கிழமை 02:09:50 PM

# கோடைக்கால வேலைவாய்ப்பை நிறைவு செய்த ஐஐஎம் மாணவர்கள்

By DIN | Published on : 28th April 2021 07:16 AM | அ+ அ அ- | |

திருச்சி ஐஐஎம் நிறுவன மாணவர்கள் தங்களது கோடைக்கால வேலைவாய்ப்பை (இன்டர்ன்ஷிப்) நிறைவு செய்துள்ளனர்.

திருச்சி ஐஐஎம் நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் கோடைக்கால வேலைவாய்ப்பு அனுபவத்துக்காக (இன்டர்ன்ஷிப்) பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்தனர். அதன்படி முதுகலை மேலாண் பட்டப்படிப்பில் 210 பேரும், மனிதவளத் துறையில் 29 பேரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 95 நிறுவனங்களில் பணிபுரிய கோடைகால வேலைவாய்ப்பு வழங்கும் அவலோன் கன்சல்டிங், டெலாய்ட், கோத்ரேஜ், செயிண்ட் கோபேன், பிபிசிஎல், டேஃப், ஆம் வங்கி உள்ளிட்ட நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

தங்களது 2 ஆண்டு பாடநெறியின் முதலாண்டை முடித்த மாணவர்கள் சந்தைப்படுத்தல், நிதி, பொது மேலாண்மை, முதலீட்டு ஆலோசனை, அதன் செயல்பாடுகள் குறித்த தொழில் அனுபவத்தைப் பெற்றனர். இம்மாணவர்கள் சராசரியாக ரூ. 85,377 உதவித்தொகையும், அதிகபட்சமாக ரூ. 2.5 லட்சமும் பெற்றுள்ளனர்.

இதுகுறித்து திருச்சி ஐஐஎம் இயக்குநர் பவன் குமார் சிங் கூறுகையில், மாணவர்கள் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. மேலும், அவர்கள் பெற்றுள்ள பணியனுபவத்தை வைத்து பல்வேறு முன்னேற்றங்களை அடைவர்.

ஆள்சேர்ப்பு நிறுவனத் தேர்வாளர்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் வரவேற்கக் கூடியதாக உள்ளது என்றார்.

ஐஐஎம் வேலைவாய்ப்புத் தலைவர் சிரிஷ்குமார் கௌடா கூறுகையில், கரோனா சூழலில் பல்வேறு சவால்கள் இருப்பினும், கோடைகால வேலைவாய்ப்புகளை மாணவர்கள் வெற்றிகரமாக நிறைவு செய்து பல்வேறு தொழில் அனுபவங்களை பெற்றுள்ளது வரவேற்கத்தக்கது என்றார்.